30th July 1962]

(இ) அப்படியானல், அதன் மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) & (இ) A memorandum from the Municipal Chairman was received in July 1960 by the then Minister for Health, asking for the provincialisation of the Municipal Hospital, Vaniyambadi. As no local contribution was forthcoming towards the cost of provincialisation, the request of the Municipal Council was not acceded to.

Medical Education and Training (Report of Expert Committee)

* 787 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Health be pleased to place on the table of the House a copy of the report of the Expert Committee appointed by the Government to enquire into the pattern of Medical Education and Training together with a statement of action taken on its recommendations?

THE HON. SRIMITHI JOTHI VENCATACHELLUM : A copy of the Report of the Special Committee on Medical Education and Training Programme is placed on the table of the House. The various recommendations made in the report are under the consideration of the Government.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: சார், இந்தப் பரிசிலனைகளின் மீது முடிவு எடுப்பது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக முடிந்து விடுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்றுதான் அரசாங்கம் அந்த ரிபோர்ட்டைப் பரிசிலனை செய்து வருகிறது.

Senior Entomologists

* 788 *Q.*—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are any vacancies in the posts of Senior Entomologists at preset; and

(*b*) if so, for how long and for what reasons they have not been filled up till now?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

எக்ஸ்பிரஸ் பஸ்கள்

* 789 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இதுவரை அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்கள், எத்தனை மார்க்கங்களில் விடப்பட்டுள்ளன?

---

a Not printed as appendix

(இ) அவற்றால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள லாப, நஷ்ட மென்ன?

(உ) அத்தகைய நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் செல்லும் கண்டக்டர், டிரைவர்களுக்கு விசேஷ படி எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

(எ) இரவு காலங்களில் எக்ஸ்பிரஸ் பஸ்கள் விட உத்தேச முண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The Madras State Transport Department is operating Express buses on eight long distance routes;

(இ) The long distance routes of Madras Branch gave a profit of Rs. 47,601 from July 1961 to February 1962 and those of the Kanyakumari Branch gave Rs. 38,792 from December 1961 to February 1962;

(உ) Crew on all long distance (express) services excepting those on Tiruchirappalli-Coimbatore are paid batta at the following rates—

	RS. NP
Drivers (single trip)	2 25
Extra batta	0 56
Total ...	2 81

	RS. NP.
Conductors (single trip)	2 25

A night halt allowance of Re. 1 is paid when the crew stay outside headquarters.

Crew in Tiruchirappalli-Coimbatore services—

Drivers—

	RS. NP.
One up and down journey	2 75
Extra batta	0 69
Total ...	3 44

Conductors—

	RS. NP.
One up and down journey	2 75

No night halt allowance is admissible in this case.

All the drivers and the conductors on Express services are eligible for Re. 0·15 nP. bonus for completing the scheduled number of trips in the shift.

(எ) The question of running night express services by the Madras State Transport Department is under consideration of Government.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30th July 1962]

திரு. வை. சங்கரன்: மாகாணத்திலே, நாகர்கோயிலில் இருந்து திருச்சி, திருச்சியிலிருந்து சென்னை என்ற முறையிலே பஸ்களை விடும்போது ஒன்றுக்கொன்று இணைப்பாக, ஒரு பஸ்ஸில் வந்து அடுத்த பஸ்ஸில் தொடர்ந்து பிரயாணம் செய்யும்படியாக அரசாங்கம் பஸ்களை விட முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: அந்த மாதிரிச் செய்தால் கன்யாகுமரியிலிருந்து மெட்ருசுக்கு வருகிறவர்களுக்குத்தான் சௌகரியமாக இருக்குமேதவிர, இடையிலே இறங்குகிறவர்களுக்குச் சௌகரியமாக இராது. எந்தெந்த இடத்தில் ட்ராபிக் அதிகமாக இருக்கிறதோ, அதற்குத் தகுந்தாற்போல் 'டைம்' நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார்: இந்த 'பாட்டா' வுடன் மாதச் சம்பளமும் கொடுக்கப்பட்டு வருகிறதா? அப்படியானால் எந்த விகிதாசாரத்தில் கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: 'பாட்டா' தனியாகக் கொடுக்கப்படுகிறது. சம்பளம் தனியாகக் கொடுக்கப்படுகிறது. போனஸ் கொடுப்பதற்குத் தனியான திட்டம் இருக்கிறது. மேஜை மீது ஒரு அறிக்கையை வைத்திருக்கிறேன். அதிலே இருப்பது தவிர வேறு ஏதேனும் விவரங்கள் தேவையானால் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. வை. சங்கரன்: பஸ் புறப்படும் இடங்களில் ரிசர்வ் செய்து கொள்ள சில நாட்களுக்கு முன்னாலிருந்து வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. நடுவில் இருந்து புறப்படும் பிரயாணிகளும் ஒரு சில நாட்களுக்கு முன் ரிசர்வ் செய்து கொள்ள வசதி அளிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: ஸ்டார்ட்டிங் ஸ்டேஷனிலிருந்து ரிசர்வ் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். நடுவில், 'இன்டரிம் ஸ்டேஷனில்' இருந்து ரிசர்வ் செய்ய வேண்டும் என்றால் அதுபற்றி கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனையை எழுதி அனுப்பினால் சர்க்கார் பரிசீலிக்கும்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: இந்த அரசாங்க பஸ்களில் அமர்த்தப்படுகின்ற டிரைவர்களுக்குள், ஹெவி வெஹிகிள் லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்கும் லைட் வெஹிகிள் லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்கும் இடையே சம்பள வேறுபாடு இருக்கிறதா? ஹெவி வெஹிகிள் லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: பஸ் ஓட்டுவதில் ஹெவி எண்டார்ஸ்மெண்ட் இல்லாவிட்டால் ஓட்டவே முடியாது. பஸ் ஓட்டுகிறவர்கள் எல்லாருக்கும் ஹெவி டியூட்டி எண்டார்ஸ்மெண்ட் இருக்க வேண்டும். சாதாரணமாக, ஜீப், ஸ்டாப் கார் ஓட்டுவதற்காக அமர்த்தப்படுகிறவர்கள் ஹெவி எண்டார்ஸ்மெண்ட் இல்லாமல் இருக்கலாம். அவர்களுடைய சம்பள விகிதத்தில் ஏதாவது மாறுதல் இருக்கிறதா என்ற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு ஆ. கு. சுப்பையா : சார், எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். மேலும் புதிய ரூட்களில் பஸ் விட அரசாங்கம் யோசித்திருக்கிறதா? எந்தெந்த ரூட்டுகளில் அந்தமாதிரிப் புதிதாகப் பஸ் விடப் போகிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : பத்து இடங்களில் லாங் டிஸ்டன்ஸ் செர்விஸ் விடப்போவதாக மானியக் கோரிக்கையின் போதே சொன்னேன். அந்தப் பத்து இடங்களைப்பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. அவைகளை இந்த ஆண்டில் எடுத்துக் கொள்வதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மின்சார உற்பத்தி

* 790 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சிறிய பாசன வசதிகளைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதா? விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The State Electricity Board is examining the question of tapping the power potential of all irrigation reservoirs as far as possible. With this end in view, the Board has already taken up the detailed investigation of Kodayar Hydro-Electric Scheme in the Kanyakumari district. The question of utilising the storages of the Lower Bhavani Reservoir, Vaigai Reservoir, etc., are under the consideration of the Board.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவைகளில் ஏதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோதையாறு ஸ்கிமைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சர்க்கார் முயற்சி செய்து வருகிறது. இப்போதே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 'பவர் டெவலப்மெண்ட்'-டுக்காக 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருக்கிறோம் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இதற்காக, ப்ளானிங் கமிஷனை அணுகியிருக்கிறோம். இதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கு வழக்குகள்

9–00 a.m.

* 791 கேள்வி.—**திரு. புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1961 மார்ச்சு முதல் 1962 ஏப்ரல் வரை வடாற்காடு மாவட்டத்தில் பதிவான மதுவிலக்கு வழக்குகள் எத்தனை?

(இ) அவற்றுள் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 18,884.

(*b*) 15,568.